**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 9/2020**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 27.01.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராமர் Father's Name : கலியகோனார்

துவக்க நேரம்: 11.36 A.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1) தாவா சொத்து ஆரம்பத்தில் ஒரு ராமசாமி என்பவருக்கு டி கார்டு மூலமாக பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அப்பொழுது நான் சிறுபிள்ளை. பள்ளியில் படித்துக்கொண்டிருந்தேன். நான் என்னுடைய வழக்குரையிலும், முதல் சாட்சியத்திலும் வழக்கு சொத்து டி கார்டு மூலமாக ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதனை மறைத்து தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) சிகப்பாயிம்மாள் என்பவர் ராமசாமியிடமிருந்து தாவா சொத்தை வாங்கினார் என்றால் ஆமாம். சிகப்பாயிம்மாள் ராமசாமியிடமிருந்து வாங்கியதற்காக வேண்டி அது குறித்து எந்தவிதமான ஆவணம் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன்.

3) கடந்த 13.07.1977 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள பதிவு செய்யப்படாத ராமசாமியிடமிருந்து சிகப்பாயிம்மாள் கிரையம் பெற்றதாக ஒரு ஆவணத்தை நான்

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை ராமசாமி எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஆவணத்தை நானே தயார் செய்துக்கொண்டேன் என்றாலும் இல்லை. ராமசாமிதான் எழுதிக்கொடுத்தார்.

4) ராமசாமி என்பவர் சிகப்பாயி என்ற நபருக்கு அந்த ஆவணத்தை எப்பொழுதும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ராமசாமிதான் எழுதிக்கொடுத்தார். ராமசாமி பெயருக்கு வழங்கப்பட்ட டி கார்டு, பின்னிட்டு ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். டி கார்டு ரத்து செய்யப்பட்டதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு படிக்கத் தெரியாது, என்னிடமிருந்த ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்தேன். வழக்குக்கு தேவையான ஆவணங்களை கொடுத்துள்ளேன்.

5) இந்த வழக்கு சங்கதிகள் பற்றி எனக்கு அதிகமாக தெரியாது என்றால் ஆமாம். சிகப்பாயிம்மாள் அவருடைய தம்பி மனைவி சீட்டையம்மாளுக்கு எழுதி கொடுத்த உயில் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. நான் பள்ளிக்கூடம் சென்றுவிட்டேன். ஆத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் உயில் எழுதிவிட்டு மாலையில் என்னிடம் வந்து சொன்னார்கள். அந்த உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

6) சீட்டையம்மாளிடமிருந்துதான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். ஆரம்பத்தில் இவ்வழக்கில் உள்ள டி கார்டு நிபந்தனையுடன் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட ஆவணம் என்றாலும் அதன்பேரில்தான் அந்த ராமசாமி என்பவருக்கு தாவா சொத்தை நிபந்தனையுடன் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதில்

உள்ள நிபந்தனைகள் எனக்கு தெரியாது. டி கார்டில் கண்டுள்ள நிபந்தனையின்படி தாவா சொத்தை விற்பதற்கே ராமசாமிக்கு உரிமை இல்லை என்றாலும், ராமசாமியிடமிருந்து பதிவு செய்யப்படாத கிரையம்மூலம் சிகப்பாயி கிரையம் பெற்றதாக சொல்வது செல்லத்தக்கதல்ல என்றாலும் இது பற்றி எனக்கு தெரியாது. எது சரி, எது தவறு என்று தெரியவில்லை.

7) தாவா சொத்துக்கு அருகில் விவசாயி நிலம் உள்ளது என்றால் ஏக்.0.27 நிலம் உள்ளது. இவ்வழக்கின் பிரதிவாதி ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் ஆமாம். நான் பிற்படுத்தப்பட்ட சமூகம் என்றால் கோனார் சமூகம். நான் ஆதிக்க மனபான்மையில் பிரதிவாதியை நான் தாவா சொத்தை ஓட்டவிடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பெயர் களியகோனார், தாயார் பெயர் சீட்டையம்மாள். எனது தாயார் சீட்டையம்மாளிடமிருந்துதான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

8) சீட்டையம்மாள் எனது தாயார் என்பதால் அவரிடமிருந்து நான் கிரையம் வாங்க அவசியமில்லை என்றாலும், உயிலோ, தானசெட்டில்மெண்டோ எழுதிபெற்றிருக்கலாம் என்றாலும் ஒரு ஆவணத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக நான் என்னுடைய தாயாரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது தாயார் வேறு ஒரு நபருக்கு விற்பதாக சொன்னார் அதனால் என்னுடைய தாயாரிடமிருநது கிரையம் வாங்கினேன்.

9) இந்த வழக்கிற்கான மூல ஆவணம் எதுவும் இல்லாததால் நானும், எனது அம்மாவும் மற்றும் சிகப்பாயியும் சேர்ந்து துர்லாபம் அடைய வேண்டி பதிவு செய்யப்படாத ஆவணமும், அதன் பின்னிட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை வழக்கிற்காக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.9/2020, Dt.27.01.2025.

வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி, குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு காலஅவகாசம் வேண்டப்பட்டது, வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.09 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.9/2020, Dt.27.01.2025.